மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.
X. D. 56

தத்ஸத்.

பரப்பிரஹ்மணேநமஃ.

அருட்பிரகாசவள்ளலார்மரபு,

மகான்.

நிச்சல-இராமாநந்த சுவாமிகள்

இயற்றியருளிய

# ஞானவிபோதம்.

இது

சென்னை ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல்

தமிழ்ப்பண்டிதர்,

கோ-வடிவேலுசெட்டியாரவர்களால்

பார்வையிடப்பட்டு,

சென்னை, பிரெஸிடென்ஸீ மாஜிஸ்டிரேட்

ஸ்ரீமான்.

பூ. இராஜரத்தின முதலியார் பி. ஏ.

அவர்களால்,

சென்னை,

சிவகாமி விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1905.

MAHAMAHOPADHYAYA
SWAMINATHA IYER LIBRARY

உ

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

சத்திய ஞானானந்தானந்தேந்திர சரஸ்வதியதி

பரமஹம்சாவதூத்,

## மகான்-ஆதிநாராயணசாஸ்திரியாரவர்கள்

இயற்றிய

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தன்னையுமே தலைவனொடு தானறிந்தா னந்தமுடன்
சாருமைக்ய
முன்னைமறை முடிப்பொருளாய் மூதுணர்வா ஞானமொழி
மொழியக் கேட்ட
தன்னைநிக ருனையி சகமயமீர் வுற்றென்றுந்
தான்றுனை
வன்னியமி லாத்நா விராமானனந் தப்பெரியோ
னருளி னூல். (1)

---

திருமூலர்மரபு, சதாசிவப்பிரமேந்திர யோகீசுவரர்

மாணாக்கர் ஸ்ரீமான், தேனாம்பேட்டை,

## சுப்பராயமுதலியாரவர்களியற்றிய

### நிலைமண்டிலவாசிரியப்பா.

சீரருண் ஞானஞ் செகமெலா மிலகப்
பேரரு ளாளன் பெரியா ருளத்தொளிர்
தேஜோ மயனுந் தேவாதி தேவன்
வாசா மஹோசர வாழ்வரு ணடன

ரம்பல வாண ரருட்குரு வாகிச்
செம்பது மத்தாள் சிரத்தினி லமைத்துச்
சின்மய முத்திரை செறிவுறக் காட்டித்
தன்மய வெளியார் தற்பர நிலையி

லசைவற நிறுத்த வதனை யுணர்ந்து
பசையற யருளுறு பான்மை யடைந்து
வாதனை யகன்று வளர்மூன் றவத்தையின்
பேத மகலப் பேசறு மதீத

பொருண்முடி வாகிப் பூவுல காதி
மருளெலா மகற்றி மாவொளி யுற்ற

சிற்பர மோன சித்தனு யசல
வற்புத மாகி யகிலாண் டமெலா

மெங்குந் தானு யிகலறக் கண்டு
பொங்குமா நந்தப் புணரியின் மூழ்கித்

தான்பெறும் பெற்றி ஜகமெலாம் பெறவே
வான்மாரி யென்ன வளர்சுகா தீத

ஞானவா ரிதியில் நன்குற மூழ்கி
மோன நிலையினை முற்று மோர்ந்திட

வருட்பாத் திருமுறை யாறையும் வகுத்திங்
கருளுட னீந்திங் ககிலத் தோர்க்குப்

பிறப்பிறப் பென்னும் பெருங்குழி யகன்றே
மறப்பிலா வின்ப வாழ்வளித் திட்டோன்

சத்திய மார்க்கச் சங்கமொன் றமைத்தா
ருத்தமர் தங்களை யுய்வகை நிறுத்தி

நனவிற் சுழுத்தி நடுநிலை நின்றோன்
கனவிற் சகமெனக் காட்சியுற் றென்றுந்

திருவருட் ப்ரகாச சித்தனுய் மன்னுங்
குருபர னடியைக் குறிப்புட னடைந்து

சற்குண னருளாற் சகசச மாதியிற்
நிற்கு நிலைதனை நெறியுடன் நேர்ந்து
நித்தியா நித்திய விவேக நிலைத்துச்
சத்திய ஞான சமரச முடிவைக்
கண்டு தெளிந்து காட்சிய தறவே
யண்டர் முனிவ ரெண்டிசை பரவ
ஸ்வகியா னந்த சொரூபனாய் மன்னி
ஏகைக பாவ மௌனிதினி லளிக்கும்

அருணா சலனெனு மருட்குரு தாளிற்
சரணா கதியெனச் சதிருடன் வணங்கி
உடல்பொரு ளாவி யுண்மையா யீந்து
ஜடவினை யகலச் சந்ததம் பணிக
டிடமுட னியற்றித் தீட்சைகண் மூன்றாற்
றடையறச் சொரூபந் தனிற்கலந் ததுவாய்ச்

சஞ்சித நீங்கச் சற்குரு வருளாற்
பஞ்சமுத் திரையின் பாகுபா டுணர்ந்து

அஜபா நிலையி னருத்த முணர்ந்து
நிஜவடி வான நிலைதனை மருவி

யகம்பிர மாஸ்மி யருத்தம தாகி
ஜகம்பொய் யெனவே சதிருடன் கண்டு

திரிபுடி நீங்கத் திகழேக ரசமாய்ப்
பரிபூ ரணமாம் பாதையி னிலைத்து

நோக்கற நோக்கும் நுட்பம தோர்ந்து
வாக்கொடு மவுன சாதன மகன்ற

வாழ்வையு மடைந்து வருந்தனைப் போலத்
தாழ்விலா தெவருஞ் சதிர்பெறத் தானிங்

கடைந்த வநுபவ மியாவரு மடையத்
திடம்பெறு சிந்தனை தெளிவுறத் தேர்ந்தே

ஊனுயி ரருளை யொழிக்கவெந் நாளும்
ஞானுயி போதம் நவின்றருள் வாழ்வாம்
ஜீவன் முக்தி சிறப்புட னடையப்
பாவனை யகன்று பரவடி வாக
வத்து விதத்தி னனுபவ மதனை
நித்திய சாதனர் நெறியுடன் பொருந்தச்
சச்சிதா நந்தத் தனிமணங் கமழ
நிச்சல ராமா நந்தவே ளியற்றிக்
கழிமல மகலக் காட்டுமந் நூலை
யெழிலுறு வாகி யின்புற் றிடவே
யவ்வா ரியன்ற னன்புட னடைந்து
பவ்வ மகன்றிடப் பகர்சா தனங்க
ணான்கு முணர்ந்து நடுநிலை சேர்ந்து
வான்பொரு ளனுமருள் வாழ்வினைக் கண்ட
நியாயாதி பதியாய் நிகழ்ராஜ ரத்னவேள்
தயாரச மாகத் தரணியோர் காணக்
குரவ னியற்றுநூல் குவலயம் பரவ
மருவுமச் சியற்றி மகிழ்ந்தளித் தனனே. (2)

அத்வைதாவதானம், ஸ்ரீமான், மணிமங்கலம்,

### திருவேங்கடமுதலியா ரவர்கள் இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அச்சமினுன் மறையினந்தத் துபநிடமா வாக்கியத்தி
னருமை தன்னை
யெச்சமயத் தவருமிறும் பூதெய்த ஞானுபி
போத மென்ன
நச்சுதமிழ் மணம்பரவ நயமலிசொற் பொருட்சுவைக
ணண்ணத் தந்தான்
நிச்சலரா மாநந்தப் பேர்பெரிய நிமலன்பூ
நிலவ மாதோ. (3)

---

காஞ்சிபுரம், பச்சையப்பன்ஐஸ்கூல்தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான்,

வெண்பாப்புலி,

### வேலுசாமிப்பிள்ளை யவர்கள் இயற்றிய

நேரிசைவெண்பா.

கரும்பதன்றீஞ் சாறதனின் கட்டியிகந் தோன்றை
விரும்புமிரா மாநந்த மேலோன்—பெரும்புகழான்
ஞானுபி சொல்கூற்றுய் ஞான நிலைதெரித்தான்
ஊனுபி கேட்ப வுவந்து. (4)

---

வித்வான், ஸ்ரீமான்,

### ஆ. மே. சென்னகேசவலு நாயுடு அவர்கள்

இயற்றிய நேரிசைவெண்பா.

ஊனுபி சங்கைக் குகந்து விடையளித்த
ஞானுபி போதத்தை ஞாலத்திற்—றேனுரு
நிச்சலரா மாநந்த நிர்க்குணசிந் தாமணிசொல்
மெச்சலரா காதவரார் மீண்டு. (5)

---

இந்நூலாசிரியர் அடிமைகளி லொருவராகிய
காஞ்சீபுரம், பிள்ளையார்பாளையம்

## ம-திருவேங்கட முதலியா ரவர்கள் இயற்றிய

நேரிசைவெண்பா.

தானு யிருந்தருளுந் தாதையிரா மாநந்தன்
ஊனுயி கேட்டுணர வோதினுள்—ஞானுபி [ன்
போதநா லென்றளித்தெம் பொய்யிருளைப் போக்கினு
வாதவூர்த் தேவெனவே வந்து. (6)

---

கனியம்பாடி வித்துவான், ம-ா-ா-ஸ்ரீ,
இலிங்காசாரி மாணுக்கர் ஸ்ரீமான் வல்லம், பனையப்பிள்ளை
குமாரர் வித்துவான்,

## வைதியலிங்கம்பிள்ளை யவர்கள் இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

களங்கமுறு மாயையினுற் கட்டுண்ட சீவர்களைக் கட்டறுத்து, விளங்குபர மான்மநெறி மேவியகண் டானந்த வெள்ளத் தாழ்வான், வளங்குலவு ஞானுயி போதமெனு நூலொன்று வழங்கி னுனல், உளங்கனிந்து நிச்சலரா மாநந்த நாமங்கொ ளுரவோன் மாதோ. (7)

சிறப்புப்பாயிரமுற்றிற்று.

---

ஓம்

தத்ஸத்

பரப்பிரஹ்மணேநம:.

# ஞானயிபோதம்.

## பாயிரம்.

### சொரூப வணக்கம்.

#### கலிவிருத்தம்.

அகில சராசர மதுவள ரிடமா
யகில சராசர மண்ணிய தலமா
யகில சராசர மாயொளிர் பொருளா
மகிலசம் பூரண வறிவினைப் பணிவாம். 1

#### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உலகெலா நிறைந்த தாகி யொப்புயர் வற்ற தாகி
இலகருட் சோதி யாகி யேகமா யனேக மாகிக்
கலகமி லறிவா நந்தக் காட்சிதந் தாட்சி பெற்றே
விலகிடாச் சாட்சி யாய விமலனை வணங்கு வோமே. 2

ஆக்கியு மளித்து மேலு மழித்தலுக் கேது வாகச்
சாக்கிபி னயனாய் மாலாய்ச் சர்வசங் கார னாகி
நீக்கமி லனந்த மூர்த்தி நீதிபெற் றெவைக்கு மேலாய்த்
தூக்கியாள் விமல போத சொரூபத்தைப் பணிகின் றேனே.

### மகான்கள் வணக்கம்.

கருவிக டொண்ணூற் றாறுங் கலந்தவைங் கோச நீங்கி
யிருளறப் பிரமந் தானா யேகமா யெங்கு மோனச்
சொரூபமாஞ் சுபாவ முற்ற சுகவாம தேவ ராதி
யருந்தவக் குரவர் பாத மன்புடன் றுதிக்கின் றேனே. 4

## சற்குரு வணக்கம்.

அவனவ ளதுவு மின்றி யகம்புற மெங்குந் தானாய்ச்
சிவமுறு சொரூப ஞான சின்மய சுபாவ மாகிப்
பவமறுத் தெனையாட் கொண்ட பரமசற் குருவா யோங்கு
மவனிரு கமல பாத மனுதினம் போற்றி னேனே. 5

மனக்கிலே சங்க ணீங்க மலரடி முடியிற் சாத்தி [ந்
யெனக்குளே யென்னைக் காட்டி யிரண்டறக் கலந்தெந் நாளு
தனக்குநே ரில்லாச் செல்வந் தந்தசற் குருவின் பாதம்
நினைப்பொடு மறப்பு மற்ற நெஞ்சினு ளிருத்தல் செய்வாம். 6

## இந்நூலுக்கு முதனூல் இதுவெனல்.

இல்லையுண் டென்பா ருள்ளத் தேகமா யெங்கு மோங்கும்
வல்லவன் கருணை யாலே வழிபடு மாண்பர்க் கெல்லா
மெல்லையிற் பிறவித் துன்ப மிரவிமுன் பனிபோ லாகச்
சொல்லுஞா னாயி போதஞ் சுருதியின் சார மாமே. 7

## நூற்பயன்.

சுருதிக ளறியா மோனச் சூக்மமாந் தன்னைக் காணச்
கருதுநல் லன்பர்க் காகக் கருவியுங் கரண மோய்ந்த
விரதியர் கருணை யாலே விளம்புஞா னாயி போதந்
திரமறிந் ததுவுந் தானாய்த் தெளிந்திடத் தீர ராமே. 8

விண்ணாதி பூதத் தாலே விளங்குமிவ் வுடலந் தானா
யெண்ணாளு மெண்ணி யெண்ணி யெங்குழ னாயி சங்கைக்
கெண்ணான்கு நான்குந் தாண்டி யிருளறச் சொரூப ஞானக்
கண்ணாளுஞ் சொல்லும் போதங் கைவல்ய முத்தி தானே. 9

## அவையடக்கம்.

### கலிவிருத்தம்.

அருளுடை யவரடி யழகிய முடிபட
விருளற விலகிடத் திதுவது வெனப்படா
தொருபொரு ளுணர்ந்தவ ருணர்விலி யுபயமில்
திரிவிதத் தவர்க்குச்சேய் செப்ப வின்பமே. 10

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கதிரவன் கிரணஞ் சூழக் கலங்குமோ கனிட்டந் தன்னிற்
சுதன்விழக் கனிட்டத் தோடச் சுதன்றனை நீக்கா ரன்பா
மதிவளா ரமுத மூட்டு மாதுஞா னயி போதம்
நிதியெனத் திருத்திக் கொள்வர் நித்திய முணர்ந்த மேலோர்.

பாயிர முற்றிற்று.

உ

நூல்.

## கொம்மிச்சந்தம்.

காப்பு.

சித்திதருஞ் செல்வ முத்திதரு மருட்
டேசிகன் சீரடி சிந்தை கொண்டு
பத்தி மிகுந்திடு ஞானயி போதத்தைப்
பாட வருட்சோதி காப்பாமே.

1 சீராரு மோங்காரத் தோட்ட மதிலொரு
செட்டி மகன்றனி வீற்றிருக்க
ஆராரு முற்றுரும் பார்த்திருக்க நீ
யொண்டியாய்ப் போவதென் ஞானயி.

2 வண்ண மயிலெனும் பெண்ண ணங்கேபெரு
வாழ்வளிக்குமரு ளைட்டாண்டி
கண்ணுக்குண் மணியு மாகுண்டி யவன்
கைவச மானேண்டி யூனயி.

3 செட்டி மகன் மெத்தக் கெட்டிக்காரன் பொத்தற்
சேலையும் பொன்னணி தாராண்டி
வட்டிக்கு வட்டியும் வாங்குவாண்டி தலை
மொட்டையுஞ் செய்குவான் ஞானயி.

4 மொட்டை யடிப்பது மோசமன்றே யவன்
கட்டி யணைத்திடுங் காதலடி
சட்டிகை தந்தாலுந் தருவாண்டி யவன்
சமர்த்தை யேதென்பே ஞானாயி.

5 அன்னநடை பெற்ற வாரணங்கே நமக்
கென்ன குறைவினி யென்றிருந்தே
னுன்னைமா நாட்டாரு மூர்த்திகளுங் கெஞ்ச
வுன்முகங் காட்டாதென் ஞானாயி.

6 இன்ன லடைமாதே யேற்றிடுவா யென்றன்
கண்ணாளன் கால்விரற் றூசியிலே
பன்னு மயனாதி தேவர்களுந் தோன்றிப்
பார்க்குமுன் னேகுவ ரூனாயி.

7 இன்சொ லளிக்குநற் கிஞ்சுகமே யுனை
மிஞ்சும் பயித்திய மேற்காதடி
நெஞ்சங் கலங்கவுஞ் செய்வாரடி யவர்
நேய ருனைக்கண்டால் ஞானாயி.

8 மிஞ்சிச் சுழல்கின்ற மேற்காற் றினினும்
பஞ்சாய்ப் பறக்கின்ற வஞ்சியேகே
ளஞ்சு முகங்கொண்டு துஞ்சுகின்ற விந்தப்
பஞ்சை களுக்கஞ்சே ஞானாயி.

9 பிஞ்சிற் பழுத்திட்ட பேச்சுக்களைப் பேச
வஞ்சி யெவரிட்ட வாதனையோ
பஞ்சையாய்ப் போவதேன் பார்க்கச்சந் யாசியாய்க்
கெஞ்சுகிறே னினை ஞானாயி.

10 கெஞ்சி யழுதாலும் வாரேனடி யென்றுங்
கேடிலானை நங்கிற் கெடுவேனடி
புன்சொன் மொழியாளே போயிடுவா யென்றன்
புறத்து நில்லாதே யூனாயி.

11 ஏகவோ விந்தநாள் வந்ததடி யுனக்
கிந்த மதிகேடு தந்ததாரோ
காகத்தை வஞ்சித்த குயிலானா யந்தக்
கட்டுரை கண்டேண்டி ஞானாயி.

12 கட்டுரை கண்டதோர் காரிகை யேயதன்
காரண காரிய மேதறிவாய்
பட்டி மகனானக் கென்னவென் பேனதைப்
பார்த்தவர்க் காநந்த மூனாயி.

13 காரண காரியங் கற்றவ ளேயதைக்
காட்டிடு வாய்கண்ணி னேர்த்தியதா
யாரண வாகம மொப்புவ தாவெனக்
கன்புட னீசற்றே ஞானாயி.

14 காரணந் தான்பஞ்ச பூத மடியதன்
காரியம் பௌதிக பேதமடி
தாரணி யாவையு மாயையின் கற்பிதந்
தந்தைதா யாவர்கொ லானாயி.

15 அன்னை பிதாவுற வாகிட வந்திடு
மற்புத தேகமீ தல்லோவடி
யுன்னைப் பெற்றவயி றென்று மொழிந்திட
வொய்யாரம் பேசலென் ஞானாயி.

16 எண்ணி லெனைப்பெற்றா ரெண்ணி லனந்தமுண்
டெவர்க்குந் தாய்தந்தை யேகனடி
திண்ணமி லுடலுக் குபாதானந் தந்தைதாய்
தேர்ந்திட வானந்த மூனாயி.

17 என்ன பொடிபோட்டிங் குன்னை மயக்கினா
னேழைப் பரதேசி யாவதற்குத்
தன்னந் தனியனுந் தாங்குவ னோவினைத்
தவறிடுங் காலத்தில் ஞானாயி.

18 அண்ட பிண்டபிர மாண்ட சராசர
மணுவென வுட்கொ ளகண்டனடி
கண்டவர் விண்டிடாக் காரண னாவெலாங்
காக்குந் தயாபர னானாயி.

19 காக்குந் தயாபர னின்னைக்கூடி யென்றுங்
கலந்துற வாகிய காரணத்தைத்
தீர்க்கமா யோர்ந்திடச் செப்பிடு வாயென்றன்
சிந்தை மகிழ்ந்திட ஞானாயி.

20 உன்னற் கரியவ னோங்கார பீடத்தி
னோங்கு மருட்சோதி யுத்தமன்றான்
றன்னரு ளாலெனைத் தானே தடுத்தாண்டா
னான்னா ததிசய மூனாயி.

21 உன்னைத் தடுத்தாண்டா னென்னி னருட்சோதி
யுத்தம னோங்கார பீடத்திலே
தன்னரு ளாலுனைத் தானே புணர்ந்திடி
லுன்னாது மொன்றுண்டோ ஞானாயி.

22 வாசா மகோசர மாகு மடியதை
வாசகத் தாற்சொலப் போகாதடி
நேச வதிகாரம் பெற்ற வருக்கன்றி
நிகழ்த்தியுந் தோன்றாதிங் கூனாயி.

23 கற்றார்கள் போற்றுநற் காரிகை யேயதி
காரமும் பெற்றார்க ளாரடியோ
முற்று மறிய மொழிந்தருள்வா யென்றன்
மூர்க்க மொழிந்திட ஞானாயி.

24 வல்லா னதிகாரி யாவன்முத் தாபமாம்
வன்னி படுபுழு வாநெளிந்து
நல்ல வருண்ஞான தீர்த்தத்தை நாடியே
நாடெங்குந் தேடுவ னானாயி.

25 மூத்தாபந் தன்னைநீ வன்னியென் றாயதன்
மூல மழிய முழுகுமென்றாய்
எத்தாலே காண்போமென் றேங்கு தடியுள
மேந்திழை யேமுத்து ஞானாயி.

26 வாத.ாதி ரோகத்தால் வந்ததத் யாத்மீகம்
வியாக்ராதி துன்பங்கள் பௌதிகமா
மீதேறு கல்மழை வானிடி தெய்வீக
மீதென்பர் முத்தாப மூனாயி.

27 எண்ணுமுத் தாபங்க ளேநெருப் பாறத
னிருகரை யேறியே யின்பமுற
புண்ணியர்க டேடுந் தீர்த்த மாவதெது
பொற்கொடி யேசொலாய் ஞானாயி.

சென்னை-20.

28 கெட்ட குடியாக்கு மெட்டு மதக்கயங்
இட்ட வரவர வெட்டிவெட்டி
நட்டப் படுத்து மிடத்து வெளிப்படும்
ஞான தீர்த்தங்கா ஞானாயி.

29 கோடாநு கோடியென் றோது மதங்களிற்
கூறுவர் சண்மதங் குவலயத்தி
லேட்டாலுங் கண்டதி லெட்டு மதங்களை
யானறி யச்சொலாய் ஞானாயி.

30 எங்கும்புகழ்-விப்பிர னென்னிற் குலமதம்
யானேசிஷ் டாசார னென்னிற்சீல
மிங்கார் பொருள்படைத் தோனெனிற் றனமா
மின்ன மதங்களுண் டேனாயி.

31 சீலங் குலந்தன மாகிய மும்மதஞ்
செப்பினாய் மற்றதன் றிறமருளாய்
கோல வருள்பெற்றுக் கூறுங் கிளிமொழிக்
கொம்பனை யேமுத்து ஞானாயி.

32 என்றனி லுமிக்க சுந்தர னுமிலை
யென்னு மதரூபம் யவ்வனங்கே
ளென்றும் புவியினி லென்னைச் செயிப்பவ
ரெங்கு மிலையென லானாயி.

33 நற்றவர் போற்றுநன் னாயக மேனினை
நாடி யநுதின மியான்றுதிப்பேன்
மற்ற மதங்களின் மர்மமு ரைத்தருள்
மாவருட் டாயாகி ஞானாயி.

34 சாஸ்திர சம்பன்ன னென்னல்வித் யாமத
தானர சாமெனல் ராஜ்யமதம்
தீர்த்தஸ் நானசந்தி செய்நிஷ்டனா னென்று
செப்பற் றபோமத மானாயி.

35 சீலங் குலங்கல்வி தனம்ரூபம் யௌவனஞ்
செப்பு மிராஜியந் தபசுடனே
காலத்தில் ஜீவர்க்கீ தெட்டு மதமெனிற்
றணற்புழு வாவதென் ஞானாயி.

36 தாபங்கண் மூன்றிற் சகித்திடா ஜீவனைத்
தான்புழு வென்பர்காண் டாரணியி
லாபத்தைத் தீர்த்தழி யாததோ ரானந்த
மாக்கு ஞானதீர்த்த மூனாயி.

37 தேடு மருண்ஞான தீர்த்தத்தை நாடிப்பின்
செய்யும் வகையென்ன தேர்வுடையோர்
நாடு மருண்ஞான நாயக மேதன்றாய்
நானறி யச்சொலாய் ஞானாயி.

38 கானவர் கண்ணி விடுபட்டு வேகமாய்க்
கால்விட்டங் கோடிடு மானெனவே
யீனமூ வேடனை மேவிடா வண்ணமே
யெழிற்குரு தேடுவா ருனாயி.

39 தீரத்தா பத்திர யத்தொடு வாசனை
திகழுமூ வேடனை தான்கழன்று
சீராரு மெய்ஞ்ஞான தேசிக ரைநாட்டிற்
றேடுவோர் தன்மையென் ஞானாயி.

40 சாதன நான்கையும் பெற்ற வருமதி
சற்குண ருமதி காரரடி
வாத பேதங்களுஞ் செய்யா ரடிகுரு
வார்த்தையு மீறார்க ளுனாயி.

41 போத வடிவுற்ற பொற்கொடி யேசுகம்
பூரண மாய்க்கண்ட வாரணங்கே
சாதகர் போற்றிடுஞ் சாதன நான்கையுஞ்
சாற்றிட வேண்டுவேன் ஞானாயி.

42 நித்தியா நித்திய வத்து விவேகமும்
நீடிக பரபோக வைராக்கியமும்
சத்திய சட்கச மாதியு முமுட்
சுத்துவமு மென்ப ருனாயி.

43 ஓதிய சாதன நான்கின் விபரங்க
ளுன்னி யுணர்ந்திட வுள்ளபடி
நீதிய தாகவே சாற்றி யிருடவிர்
நித்யத் துவஞ்சேர ஞானாயி.

44 சத்திய மான்மா வசத்திய மூலகந்
தானறி வத்துவி வேகமடி
மத்திமி லிம்மை மறுமையிற் போக
மறுப்பது வைராக்கிய மூனாயி.

45 ஓதிடு மூன்றுவ தாகுஞ் சமாதிக
ளோராறின் வண்ணங்க ளோர்ந்திடவே
சாதிக்க வேண்டுமென் சந்தேக மூந்தீர
சற்குண ரூபியே ஞானாயி.

46 அந்தக் கரண மடக்கல் சமந்தா
னாகும் புலன்க ளடக்கற் றமமா
மெந்தத் தொழிலு மறுதல் விடலாம்
யேந்திழை யேகா ஞானாயி.

47 சொல்லுஞ் சமாதியுண் மூன்றையுங் கண்டேண்டி
சோதனை யாகநீ சொன்னதினாற்
றொல்லை யறநின்ற தோகைபோல் வாய்மற்றுந்
தோன்றிடச் செப்புவாய் ஞானாயி.

48 காமாதி வந்தாற் களைதல் சகித்தல்
காரண குருநூ லன்பே சிரத்தை
நேமப் பொருடனை நெஞ்சி னிறுத்தலே
நேருஞ் சமாதான மூனாயி.

49 பங்கயக் கண்ணம்மை பாவைகல் லாயருட்
பான்மைபெற் றொளிரும் பைங்கிளியே
சங்கை யறநான்காஞ் சாதனந் தன்னையுஞ்
சற்றருள் செய்குவாய் ஞானாயி.

50 பத்தி மிகுந்தோங்கும் பாவையே கேண்முன்னர்ப்
பன்னிய சாதனம் பூர்த்தியதாய்
முத்தி யபேட்சை முமுட்சுத்வ மென்பர்கண்
மோக மறக்கண்டா ரூனாயி.

51 சாதன நான்கையுந் தானறிந் தேனினித்
தக்கநற் சிஷ்ருவைத் தான்றெரிப்பாய்
போதக ருள்ளொளிர் புத்தமு தேமூடம்
பூரண மாய்நீங்க ஞானாயி.

52 அங்க முடனுப்த சத்பாவ னைஸ்தான
மாகுந் திருப்பணி நான்கினையுஞ்
சங்க யறப்பெற்ற சாதுக்க ளைத்தேடிச்
சற்குரு தோன்றுவா ருனுயி.

53 சத்திய சற்குண சாதுக்க ளைத்தேடிச்
சற்குரு வந்தென்ன செய்வரடி
யெத்திசை யுமோங்க வென்றனுக் குந்தோன்ற
வியம்பரு ளன்னையாய் ஞானயி.

54 சேல்விழி மாதர சேயுனக் கென்னென்பேன்
செம்மையாய் பார்த்துன்னிப் பரிசித்தே
நூன்முறை யுத்தி யநுபவ மொத்திட
நுவலுவர் மேலோர்க ளுனுயி.

55 உண்மையிங் காவது மென்னடி யோவதை
யோர்ந்தவர் பெற்றது மென்பயனே
திண்ண மாகவுரை செய்திட வேண்டுநின்
சீரடி போற்றுவேன் ஞானயி.

56 தன்னை யறிந்ததிங் குண்மை யடியென்றுஞ்
சாதல் பிறப்பற ருன்பயனும்
மின்னே ருலகினை மித்தையாக் கண்டாரின்
மேன்மைதா னென்னென்ப னுனுயி.

57 தன்னை யறியாரிவ் வைய கத்தின்கண்ணே
தானெவர் கைகாற் றலையெனவே
துன்னு முடலிதோ தோன்றிடக் கண்களிற்
றேகையீ தேதென்பேன் ஞானயி.

58 பஞ்ச பூதவுடற் பான்மை யறுநான்கு
பன்னுஞ் சூக்மம்பதி னேழதாகும்
மிஞ்சிய தத்துவ மவித்தையாங் காரண
மேவுமைங் கோசமீ தானயி.

59 தூலமொடு சூக்ஷ்ம காரணந் தானென்று
சொல்லுமுத் தேகக் கருவியெலாஞ்
சாலவே தொண்ணூற்று றென்னினு மைங்கோசந்
தன்னைநீ சாற்றுவாய் ஞானயி.

60 அன்ன மயமாதி யானந்த மீறுக
வைந்து கோசமென்ப ரடைவாகப்
பன்னு மயனாதி தேவர்க ளங்கங்குப்
பாது காப்பரென்று மூனாயி.

61 ஐந்து கோசகுகை யாகு மிவைக்கென்று
மைவ ராதிகாவ லாகுமெனச்
சுந்தரி நீசொல்லக் கேட்ட தன்றியெனைத்
தூல மன்றிக்காணேன் ஞானாயி.

62 துன்னு மிந்தவுடற் றூலமென்ப ரதைச்
சோதிக்கச் சீழ்ரத்தந் தோலெலும்பாய்ப்
பன்னுந் தசைநரம் பாகு மிவையினீ
பார்த்தெது சொல்லுவா யூனாயி.

63 சொல்ல வெனைக்காணேன் தோகைநின் னலிந்த
தூலத்தைச் சோதிக்க விட்டதடி. [த்
யல்லல் படுந்துய ராயிற் றடியெனை
யன்புடன் காட்டுவாய் ஞானாயி.

64 பூதங்க ணீயல்லை பொல்லாப் பொறிபுலன்
புந்தி மனமாதி போதமல்லை
வேத முடிவாகி விண்ணாகிப் பற்றற்று
விளங்கிடுஞ் சாட்சிநீ யூனாயி.

65 அன்னை பிதாகுரு வின்னஞ்சொற் பொருள்கள்
யாவுமா யின்றரு ளன்னையாய்வந்
தென்றனை நீசாட்சி யென்பதிங் கெவ்வகை
யேழைக் கருள்செய்வாய் ஞானாயி.

66 துன்னு மூலகாதி தொண்ணூற் றறுவரின்
சூதெலாங் கண்டுணர் தொல்லறிவாய்
மின்னொளிர் வானென மேவியோர் பற்றிலா
மெய்யருள் சாட்சிநீ யூனாயி.

67 பன்னிப் பலவாறு யென்னை விளக்கியும்
பார்க்க வெனைக்காணேன் பரிந்தருளா
லென்னை யெனக்களித் திடேற்றி னின்னடி
யென்று மறந்திடேன் ஞானயி.

68 தன்னை யறியத் தனக்கொரு கேடிலை
தக்கோ னருள்வந்து சாருமடி
தன்னை யறியு மறிவாக நிற்றலைத்
தன்மய மென்பர்கா ணானயி.

69 பன்மயக் காகிய பாருல காதியுஞ்
சொன்மயக் காகத் தொலைந்ததடி
யென்மயக் கறவே யங்கையின் கனியா
யென்னையுங் காட்டுவாய் ஞானயி.

70 ஆற்றினிற் பத்துப்பே ரக்கரை யிலேறி
யன்பனைக் காண தழுதலறிப்
பூர்த்தியாய்த் தன்னோடு பத்தாம்வானைக் காணப்
பொங்கிடு மானந்த மூனயி.

71 பொங்கிடு மானந்தம் பத்தாவானுந் தானாப்
பூரண மாக்கண்டாப் போலுளத்தின்
சங்கை யறத்தன்னைத் தானாக்கி யாண்டரு
டாயே தயாபரி ஞானயி.

72 யாவு மறியு மறிவை யறியவே
றறிவு மிருக்குமோ யறிவதற்கு
பூவலர் சோதிக்கோர் சோதியும் வேண்டுமோ
பொன்னன்றி யோபணி யூனயி.

73 பொன்னை யன்றிப்பணி யில்லா வகைபோல
யென்னை யன்றிக்காண்பா ரில்லையென
வன்னையே வுன்னுரை யாகுமல் லாலெனை
யற்பமுங் காண்கிலேன் ஞானயி.

74 அற்பமுங் காணரி தாகுநின் னையிங்
கனுபவ மாய்க்காண வாசைகொண்டாய்
கற்பனை யுலகைக் காணா மதையிங்குக்
கண்டறிந்து சொல்வா யூனாயி.

75 கண்டறிந்து சொல்லக் காணா முலகினைக்
காண்பவ ராரொன்றாய் கருணையினா
லண்டபிண் டபிர மாண்ட சராசரங்
கண்டதுங் கண்ணன்றோ ஞானாயி.

76 கண்டதுங் கண்ணொன்றாய் கண்ணின்மு னின்றா
கண்ணிருந் துங்காணாக் காரணத்தை [னைக்
விண்டிடுங் கண்மன விடயம தாகும்வி
வேக மதற்குண்டோ வூனாயி.

77 தோன்றிடு மிவ்வுல கிந்திரியா திகளுந்
தோன்றிடு மென்மனத் துள்ளபடி
யீன்றுல கன்னையா யென்றென்னை யாளுநல்
லின்ப சொரூபியே ஞானாயி.

78 இந்திரியா திப்பிர பஞ்சங்க ளியாவுந்தா
னென்மனத் தோற்றமென் றியம்பியதா
லுன்றன் மனமது முன்னைவிட வுண்டோ
வுற்றறிந்து சொல்வா யூனாயி.

79 என்னை விடக்காணே னியானு மனமன்று
யாவு மறிந்த வுணர்வாகி
யன்னையே நின்றன னாகிலுஞ் சீவேச
லைக்கி யத்தைக்கூறாய் ஞானாயி.

80 பாருநீ தொம்பத லட்சியப் பொருளே
பண்ணுந் தற்பதலட்சி யார்த்தமதைத்
தேரிடப் பிர்ம்மந்தா னாகு மைக்கியஞ்
சீவேசர்க் கில்லைகா ணானாயி.

81 என்ன வகையாலே சீவேச ருக்கைக்ய
மென்று மாகாதெஜன் றியம்பியதென்
னன்னை யெனவந்திங் காண்டடி மைக்கொண்ட
வற்புத மேசொலாய் ஞானியி.

82 பேசுஞ்சீ வேசர்கள் வாச்சியார்த்த மாகும்
பேத மிடம்பெய ராதியாலே
நாச முடனுணர் வாற்பல தாரமாம்
நாடுமண் விண்போல ஞானியி.

83 தத்துவ மசியின் லட்சணங் களையுஞ்
சாதிக்க வேண்டுமென் சங்கைதீரச்
சத்திய ருள்ளத்தி ஞெத்துற வாகிய
சற்குண மாங்கண்ணே ஞானியி.

84 தத்வ பதங்களின் வாச்சியார்த் தங்களைத்
தன்னில் லட்சியார்த்தஞ் சாட்சிபிர்ம்மம்
நித்த மசிபதம் நீயது வாமென்று
நிகழ்த்திடுங் காணைக்ய மூஞனியி.

85 இகழுறு தொம்பத தத்பத லட்சியஞ்
சேர்க்கி லசியெனச் செப்புவதா
லகமதி லானந்த மாகு மதைச்சேர்க்க
வறுபவ மெவ்வாறு ஞானியி.

86 விண்ணிற் கடாகாயம் வேறுப டாவண்ணம்
மேவுங் கூடத்தனே பிரமமடி
திண்ணமாய்க் கண்டுசி வோகமென் றேயிரு
தேர்ந்தரு ளாகுவா யூஞனியி.

87 தேர்ந்தரு ளாகநீ கூடத்த பிர்ம்மமாய்ச்
செப்புவ தெவ்வுகை சிற்றறிவா
லோர்ந்திடச் சாற்றுவா யுத்தம ருள்ளொளி
ரோங்கார ரூபியே ஞானியி,

88 மேவுங் கடநீரின் மேகநீ ரிற்றோன்றும்
விண்ணிரண் டும்பொய்யே விண்ணுடனே
தாவுங்க டாகாயந் தான்கலந் தேகமாஞ்
சாட்சி பிர்ம்மமொன்றே யூஞனியி.

89 வஞ்சமில் குருவாய் வந்தெனை யாண்டருள்
வானமு தேயென்றும் வாழிவாழி
பஞ்சகோ சப்பெரும் பாழ்வெளி தள்ளியே
பார்க்குமெ னைக்கண்டேன் ஞானாயி.

90 சொல்லு நனவிற் சுழுத்தியு மாகிமேற்
சொரூப சுபாவமுந் தோன்றிநிதம்
நில்லா மனமற நிர்வாணம் பெற்றதும்
நிச்சய மோசொலாய் ஆனாயி.

91 என்னையுங் கண்டனை னேகமி ரண்டெனா
தெங்கு மருட்சோதி சின்மயமா
யுன்னவும் போகாதுன் பொன்னடி சாட்சியா
யுத்தமி யேநாளும் ஞானாயி.

92 உன்னும லுன்னிடு முன்னிலை தானற
வோயாம லங்கிரு வுற்றவிட
முன்னவர் வாழ்வது மவ்விடத் தென்றிடின்
மோசமுண் டோசொலா யூனாயி.

93 ஆதி பராபர மாகும் பெருஞ்சோதி
யன்பே குணாதீத மாநிலையிற்
நீதி நெறிபெற்ற முத்த ருடன்கூடி
நின்னையுங் கண்டேனே ஞானாயி.

94 என்னையு முன்னை யிரண்டாகக் கண்டநீ
யேகமாய் நின்றது மெவ்வகையோ
உன்னனு போகமா யுற்றுணர்ந்த வனை
முன்னத மாய்ச்சொலா யூனாயி.

95 உன்னு முணர்வன்றி யில்லை யுலகாதி
யுன்னை யன்றியானு மில்லையடி
துன்னுங்க யிற்றிற்பாம் பில்லா வகைபோலச்
சோதிக்கி லொன்றேதான் ஞானாயி.

96 என்னையு முன்னையு மொன்றாகக் கண்டபி
னேது குறையினி யியற்கையுட
னன்னமே யாசையற் றதுவாகி நிற்பதிங்
கன்ப ரனுபவ மூனாயி.

97 உன்னரு ளாலேநா னுலகாதி யாவுமா
யோங்குகின் றேனெங்கு மூத்தமியே
யென்னுட லாதியாய் முன்னமே கொண்டதா
லேதென்பன் கைம்மாறு ஞானுயி.

98 நித்த நிருமல சித்தம தாயரு
ணீங்கா நடுவணை மேவிச்சதா
சுத்தமெய்ஞ் ஞானசொ ரூபமாய் நின்றிடிற்
றுேகை யதுபோது மூனுயி.

99 நீங்காச் சொரூபநன் னிட்டைபெற் றோர்க்கிடர்
நீடுல கில்வந்து நேருமெனி
லோங்கார ரூபியா னோர்ந்திடச் சொல்லுவா
யுள்ள தடைகளை ஞானுயி.

100 சொல்லத் தடைகளு மஞ்ஞான சந்தேகச்
சோரா விபரீத மூன்றுகும்
வெல்லு மவைகேட்டல் சிந்தித்த றெளிதல்
வேண்டு மடிநித்த மூனுயி.

101 எஞ்ஞான்று மின்பானு பூதிபெற் றோையு
மேய்க்கக் கருது மியல்புடைய
வஞ்ஞான சந்தேக விபரீ தங்களை
யைய மறக்கூறுய் ஞானுயி.

102 தன்னை மறைப்பதஞ் ஞானமடி குரு
சாற்றுரை நம்பாமை யையமடி
மின்னிக ருலக மெய்யுடற் றனென
மேவல் விபரீத மூனுயி.

103 துட்டமுத் தடைகள் சேர்ந்திடா தவண்ணந்
தூயநற் கேள்விசிந் தித்தலொடு
முட்டாமெய்த் தெளிவா மூன்றன் வகையினை
முறைபெறக் கூறுவாய் ஞானுயி.

104 தத்துவா நுபோகஞ் சாதித்தலே கேட்ட
தான்பொரு ளுகஞ்சிந் தித்தலடி
சித்தமே காந்ததெ ரிசனங் காண்பது
தெளிதலா மென்ப ருனுயி.

105 சித்த மிந்தவண்ணம் நீங்கா நெறியுறி
னிர்வாண முற்றிடு மென்பதனு
லெத்தனை நாள்வரை கேட்ட லாதிவேண்டு
மேழைக் கருள்புரி ஞானயி.

106 எந்தநாள் ஞாதுரு ஞானமு நழுவு
மந்தநாள் வரைபு மாகுமடி
சந்ததமு ஞேய மாத்திர மாய்நிற்போர்
சகத்தின் வேறுகுவ ருனயி.

107 பாவனை தான்கடந் தேறியரு ளுண்மை
பற்றியே விண்ணிகர் பான்மைபெற்ற
ஜீவன் முத்தர்களு நால்வகை யென்பதைத்
தேர்ந்திடச் செப்புவாய் ஞானயி.

108 பிர்ம்ம வித்தன்வரன் வரியான் வரிட்டன்
பேதங்க ளால்வகை பெற்றியொன்றே
பிர்ம்ம வித்தனுல கோர்க்குப காரமாய்ப்
பேதமற்றே வாழ்வ னானயி.

109 பேதமற்று வாழ்வன் பிர்ம்மவித்த னென்னிற்
பின்னை மூவருற்ற பேதமென்னே
யாதிப ராபரி சோதிசொ ரூபியே
யற்புத மாங்கண்ணே ஞானயி.

110 மூவருள் பின்னிரு முத்தர் சமாதியில்
முயங்குவ ருன்னுணர் வோன்வரனே
யேவும் பிறரா லுன்னுவோன் வரியா
னிவையற்றோன் வரிட்ட னானயி.

111 இவ்வாறு நானிலை யானலு மவர்க்கிங்
கேகமா முத்திநீ யென்றதனுற்
செவ்வறி வோர்மௌன யோக சமாதியுஞ்
செய்யும் விசேடமென் ஞானயி.

112 நேச சிவராஜ யோக சமாதியி
னின்றவர்க் குப்பல மேதினியில்
பேசுஞ் சுகதுக்கம் பிர்ம்மவித் தன்மூன்று
பேருஞ் சுகமாவ ருனயி.

113 உண்மை நிலைபெற்றா ரிவ்வுல கிலவ
ருணர்தற் கரிதாகி யெங்குறுவர்
கண்மறை வாகியே நிற்கு மவர்களைக்
காண்பதெவ் வாறுகாண் ஞானாயி.

114 எத்தொழி லுஞ்செய்வ ரிவ்வுலகி லவ
ரேக பிர்ம்மானு பூதியாலுன்
மத்த ரொடுபாலர் பேயரு மாயருள்
வாழ்வைப்பெற் றுறுவ ரூனாயி.

115 பெத்தர் துவந்துவம் பெற்றெந்நாளு மவர்
பிறந்தி றந்துவந் துழல்வரடி
முத்தரு மப்படி செய்வரெனி லிங்கு
மோன ரென்பதென்னோ ஞானாயி.

116 இத்தரை தன்னிற்பி ராரத்த கன்மத்தா
லேற்கும் விவகாரம் பற்பலவா
முத்தரு மாதவ வாணிப முஞ்செய்வர்
மோச மிலைகண்டா யூனாயி.

117 சித்த மற்றசுக வாழ்வைப் பெற்றவர்
செய்யுந் தொழிலதிங் கெவ்வகையோ
நித்த மௌனக்கூடி யொத்துற வாகியு
நிர்க்குண மாயொளிர் ஞானாயி.

118 தண்ணீர் தலைக்கொண்டு தாதி விளையாடி
தன்னிரு கைவீசித் தானடந்து
மெண்ணங் குடம்விட்டுப் பேர்ந்திடாத வண
மிருப்பர் ஜீவன்முத்த ரூனாயி.

119 தன்னிலை தானுற்றுத் தானானோர் தொழிற்
றானுற் றிடிலிங்குத் தாழ்வலவோ
சொன்மயக் கமறத் தன்மயம் பெற்றார்கள்
சூட்சுமத் தைச்சொலாய் ஞானாயி.

120 வேய்க்கூத்த னாடிய வித்தைய தாகவி
ளங்கு நடுவணை மேவிச்சதா
பேய்க்கூத்து மாடினும் பிர்ம்மாநு பூதியைப்
பேர்ந்திடார் களென்று மூனாயி.

121 பிர்ம்மாநு பூதியைப் பெற்றோர் களுங்கன்மப்
பேதையர் போலவே வாழ்வரெனின்
நிர்ம்மூட வஞ்ஞானஞ் சூழ்ந்திடா தவணம்
நேராய் நிகழ்த்துவாய் ஞானயி.

122 எங்கு நிறைந்தொளிர் விண்ணகி யாவுமா
யென்றுமே பற்றற்ற நிட்டைபெற்ற
துங்க வருண்ஞான சோதியா தித்தனைச்
சூழிரு டானுண்டோ ஆனயி.

123 துன்னு மிந்தவுட லன்று யபோக்தாவாய்ச்
சோதி யுருப்பெற்றூர் சீவன்முத்த
ரென்னி லவர்க்கிங்குப் போகங்க ளுமுண்டோ
யான்விளங் கக்கூறாய் ஞானயி.

124 சொல்லு மறுசுவை யின்குணக் குற்றங்கள்
சுத்தா சுத்தமெனுந் தோற்றமின்றி
வெல்லுங் கனலென நேருமதை யுண்பர்
மேவுமா போகியா மூனயி.

125 இந்தி யாதிகர ணங்களையு நீக்கி
யென்று மகர்த்தராய் நின்றவர்கள்
சொந்தமாய்த் தொழில்கள் செய்திட லு முண்டோ
தோன்றிடச் செப்புவாய் ஞானயி.

126 செய்கை யேதுமற்ற காந்தச் சிலைமுனஞ்
சேட்டைசெய் யிரும்பின் செய்கையொத்து
மெய்கலந் திந்திய செய்கைக்குஞ் சாக்ஷியாய்
மேவுவன் மாகர்த்த னானயி.

127 மாகர்த்தன் மாபோகி யாகு மிருவரின்
வாய்மை நிலைகேட் ளெங்குளிர்ந்தேன்
சோக மறுத்தருள் செய்யுமாத் தியாகியின்
சொரூபந் தெரித்தருண் ஞானயி.

128 தீமை நன்மையாதி சேரினும் பளிங்குச்
செய்கை யொத்துள்ளஞ் சலிப்பறவே
பூமலி யன்பர்கள் போற்றச் செயலற்ற
புண்ணியன் றன்தியாகி யூனயி.

129 செப்பரி தாமுத்திச் செல்வ மளித்தருட்
டேசிக ராய்வந்த தெள்ளமுதே
யொப்புயர் வற்றார்க் கியமாதி யுண்டெனி
லோர்ந்திடச் செப்புவாய் ஞானாயி.

130 பூதாதி யிந்திய மியாவுக்குஞ் சாக்ஷியாய்ப்
போக்கு வரவற்ற பூரணமாய்ப்
போதாந்த மாய்த்திருக் காகவே நின்றிடில்
போற்று மியமமா ஓனாயி.

131 கண்ணுக்குண் மணியா யென்னையு மாண்டருள்
காரணி யேசர்வ பூரணியே
மண்ணுக்கு ணியம மார்க்கத்தி னுண்மையை
மாதே யெனக்கருள் ஞானாயி.

132 சச்சிதா னந்தசொ ரூபரா கிக்குண
ஜாதி நாமரூப ரகிதராகி
யிச்சையி லாதென்றும் யாவுமாய் நிற்றலே
யேற்கு நியமங்கா ஞானாயி.

133 கொஞ்சுங் கிளிமொழி கொம்பனையே நீயுங்
கூறு மியமாதி கூட்டமெனும்
பஞ்ச தசயோகந் தன்னிற் றியாகமும்
பகர்ந்திட வேண்டுவேன் ஞானாயி.

134 துன்னுந் தனக்கன்னிய மாகுந்தே கேந்தியத்
தோற்றங்க டாமொன்றுஞ் சேர்ந்திடாமற்
தன்னுட் டனைக்கண்டு தானாக நிற்பது
தானல்லோ மாத்தியாக ஓனாயி.

135 ஞானிக டாந்தொழு நாயக மேதுயர்
நாசம தாக்கிய நல்லமுதே
யீனத் தொழிலற மோனச் சுகமதை
யேழைக் கருள்புரி ஞானாயி.

136 வாக்காதி மூன்றற்கு மெட்டா வநுபவ
வத்துவே தானது வாயெழுந்த
போக்கறச் சும்மாதா னின்றிட லேயது
பூரண மாமௌன ஓனாயி.

வே. சாமிநாத ... சென்னை

137 எண்ண மற்றசிவ ராஜ யோகியரு
மேற்குந் தேசமது மெய்வகையோர
வண்ணம் வடிவற்ற வாழ்வதனி சொலாய்
வான்சுக முண்டாக ஞானாயி.

138 தீர்க்க ளோங்குமெய்த் தேசமா சார்யோர்
தேசத்தாற் றனைத்தெ ரிந்தவர்க்
பேரரு ளாகிடு மேகாந்த தே...
பிறப்பறுந் தேசங்கா ணானாயி.

139 கோல வருண்மேனி கொண்டுல காதியை
ஜாலமாக் கண்டிடுந் தன்மையர்க்குக்
காலமொன் றுண்டோதான் காரணி யேசொலாய்
கண்டிட வேழைக்கு ஞானாயி.

140 கால நியமங்கள் கற்பிக்கப் பட்டுமக்
காலத்துட் சேராது பூரணமாய்க்
காலங்கண் மூன்றற்குங் காரண மாய்நின்ற
கால மதேசிவ மானாயி.

141 வீசு மலைகடற் சூழும் புவிநிறை
விண்மயம் பெற்றொளிர் விமலரெனும்
பாசமற் றுருறு மாசனந் தானெது
பகர்வா யறிந்திட ஞானாயி.

142 காயக்கி லேசமி ளைப்பாதி நித்திரை
கன்ம ரோகம்பல காணுகையில்
நேய வுடற்கெது நேரு மதுவல்லோ
நிகழ்த்துஞ் சுகாசன மானாயி.

143 இந்த வுலகுறுந் தோற்ற மெழுவகை
யென்னு முயிர்நிலை தன்னைவாட்டும்
பந்தங் களுக்காதி பந்த மெதுவாகும்
பாரி லெனக்கோது ஞானாயி.

144 பந்தங் கட்குமூல பந்த மெதுவெனிற்
பந்த மவித்தையாம் பார்க்கிலுமப்
பந்தங் கெடுஞ்சர்வ தத்வங் கட்குமூல
பந்த மென்பர்மேலோ ரானாயி.

145 மோக விருள்கெட்டுச் சுபாவீ கம்பெற்ற
மூத்த புருஷ ரநுசரிக்குந்
தேகசா மியமுஞ் சிந்தை களிக்கவே
தெரித்தருள் செய்குவாய் ஞானயி.

146 மாகடற் றன்னிலே பற்பல நதிகள்
வந்து கலந்தொன்றும் வாறுபோலத்
தேகேந்தி யங்களுஞ் சித்சுகத் தொன்றுகில்
தேகசா மியந்தா னுனயி.

147 மூத்த ரொடுசித்தர் நித்தம் புகழ்ந்தொளிர்
மோனப் பொருளென மூவுலகும்
நத்துந் திருக்ஸ்திதி நிச்சய மாவது
நானறி யச்சொல்வாய் ஞானயி.

148 பஞ்ச பூதங்களும் பௌதிக பேதமாய்ப்
பார்க்கு மூலகப் பகுப்புடனே
மிஞ்சு மனமாதி திரிசிய மற்றது
மேலோர் திருக்கென்ப ரூனயி.

149 பார்க்கப் பலபணி பொன்னி லடங்கல்போற்
பஞ்சபிரா ணந்தக் கரணமுடன்
சேர்க்கச்சின் மயமுந் தானகி நிற்பவர்
செய்ப்ராண யாமமென் ஞானயி.

150 நிகழு மூலகாதி நாம ரூபங்கள்
ரேசித்துச் சச்சிதா னந்தமதின்
புகழைப் பூரித்துப சாந்தத்தைக் கும்பித்தல்
போற்றும்ப்ரா ணயாம மூனயி.

151 வாக்கு மனமற்ற வத்துவாய் நிற்போர்க்கு
வாய்த்த பிரத்யா காரத்தினை
நீக்க மறவரு ணித்திய நிர்மல
நிர்க்குண மாம்விண்ணே ஞானயி.

152 சத்தியா சத்திய விடயங் களுக்கெலாஞ்
சாட்சியே தானகுந் தத்துவத்தை
நித்தியஞ் சிந்தித்த லேபிரத்தி யாகார
நிர்ணயந் தானகு மூனயி.

153 ஞான வஞ்ஞானங்க ளைச மாக்கிநடு
நாயக மாக நடனஞ்செயும்
மோனசுஞ் ஞானிகள் செய்யுந் தியானத்தை
மொழிந்தருள் செய்குவாய் ஞானாயி.

154 தேகமுட னிந்திய பிராணாதி பஞ்சக
திரிசியத் தைக்காண் டிருக்கெனவே
சோக மறத்தன்னை யுள்ளத் திருத்தலே
சொல்லுந் தியானங்கா ணானாயி.

155 ஆரணம் புகழுங் காரணி யேயெங்கு
மானந்த மாய்நின்றோ ரனுசரிக்குந்
தாரணை யோகத்தை சாற்றிட வேண்டுமுன்
றாளடி போற்றுவேன் ஞானாயி.

156 புத்தியா லியாவையும் பார்க்கு மெதுவதைப்
பூரண மாய்நெஞ்சிற் பொருந்தவைத்து
நித்தியம் போற்றுவர் தாரணை யோகமாய்
நிர்க்குணம் பெற்றார்க ளானாயி.

157 ஆதி யந்தமற வற்புதங் காட்டிய
வாரணங் கேயாவு மற்றொளிருஞ்
சாதுக்க ளேற்குஞ்ச மாதியோ கத்தையுஞ்
சாற்றிட வும்வேண்டும் ஞானாயி.

158 சர்வா வத்தையிலுஞ் சர்வந் திருக்கெனச்
சந்ததமு நெஞ்சிற் றானிறுத்தல்
நிர்வாண யோக சமாதி யிதுவென்பர்
நிச்சய முணர்ந்தோ ரானாயி.

159 இச்சை யிலாரேற்கும் பஞ்ச தசயோக
மென்னும் பெரும்போக மின்றறிந்தேன்
சச்சிதா னந்தந்தா னாகும னுபவஞ்
சாற்றிட வேண்டுவேன் ஞானாயி.

160 தோன்றிநின் றழியுந் தேக மாதியோடு
சொல்லுமுக் காலத்துந் தோடமின்றிச்
சான்றறி வாயென்றுந் தாக்கற நிற்பது
சத்தென்ப தாகுங்கா ணானாயி.

161 உத்தம ருள்ளத்தி லென்றும் விளக்கதா
யோங்கி வளர்ந்திடு முத்தமியே
யெத்தாலுங் கெட்டிடாச் சத்தாகி நின்றதுஞ்
சித்தான தெய்வகை ஞானுயி.

162 காணு மூலகாதி யிந்தியங் கரணம்
கரையில் சகலமுங் காரிருளாய்த்
தோன்றுங் கேவலமுங் காண்பதாற் சந்தே
சித்தாகு மென்றுண ருனுயி.

163 ஈன மறவென்று மீடேற்றி யாண்டெனக்
கின்பக் களஞ்சிய மீந்தளித்த
ஞான சொரூபியே யானந்தா நுபவம்
நானறி யச்சொல்வாய் ஞானுயி.

164 தேனெடு கற்கண்டு தீஞ்சுவை முக்கனி
தின்னு மவர்க்கெய்துந் தீர்வையதுந்
தாஞகித் தன்னிடம் போராப் பிரியத்தைத்
தானென்ப ரானந்த மூனுயி.

165 சச்சிதா னந்தந் தனக்கன்ய மன்றென்று
தானறிந் தேனுன்றன் றண்ணருளா
லிச்சை யற்றூர்க ளிருக்கு மிடமுண்டோ
ஏழைக் கருள்செய்வாய் ஞானுயி.

166 பட்ச மகன்ற பரமாஞ்ச ருக்கிடம்
பாரிலு முண்டெனிற் பகருமென்றாய்
துச்ச மகன்ற துரியவோங் காரத்திற்
றூங்காமற் றூங்குவ ருனுயி.

167 தூங்காமற் றூங்குவர் துரியவோங் காரத்திற்
றுச்ச மகன்றோ ரெனவுரைத்தா
யோங்கார லட்சண மேழைக் கருள்செய்வாய்
முத்தமி யேமுத்து ஞானுயி.

168 சொல்லு மகார வுகார மகாரங்கள்
சூதறிந் தவற்றின் றொடர்பகற்றி
னெல்லையில் வானதா யாவுக்கு மாதார
மேதென்ப ளேங்கார மூனுயி.

169 அன்னையாய் வந்துவந் தென்னையு மாண்டரு
ளாகுநற் சோதியெ னன்புருவே
சொன்னவோங் காரத்து ளுன்னு மகாரத்தின்
றெருக்தந் தெரித்தருள் ஞானாயி.

170 தூல தேகநினைப் பாமிட நேத்திரந்
தோன்று மிராசதங் கிரியாசத்தி
மேலுஞ் சீவாத்மாபி மானி விசுவனினம்
மேவு மகாரத்தி ஞானாயி.

171 மாதே யகாரத்தின் மர்ம மறிந்தேனென்
மனமுங் குளிர்ந்தது மயக்கமற்றிப்
போதே யுகாரத்தி னுண்மை யுரைத்தருள்
பூரணி யெழுத்து ஞானாயி.

172 சூக்குமங் கனவு நெஞ்சமிச் சாசத்தி
துன்னுந் தைசச னந்தராத்மா
காக்குஞ் சாத்வீக மாகு முகாரத்திற்
காணு மடியின்ன ஞானாயி.

173 தேக மிரண்டு மகார வுகாரத்திற்
சேர்ந்ததி னாலின்னஞ் சேயனேற்கு
மோகாந்த கார சுழுத்தி மகாரத்தை
மொழிந்தருள் செய்குவாய் ஞானாயி.

174 காரண தேக சுழுத்தியுந் தாமதங்
காணும்பி ராஞ்ஞன்பர மாத்மனோடு
பாரச் சுகபோகந் திரவிய சத்தியாம்
பண்ணு மகாரத்தி ஞானாயி.

175 துன்னுமூன் றக்கரந் தன்னி லுடலாதி
தோற்றங்க ளாகிமேற் சொல்லிறந்தும்
பின்னுமோங் காரத்தின் மூன்று மொடுங்குநல்
பெருமைதா னெவ்வித ஞானாயி.

176 அகார மொடுங்கு முகாரந் தன்னில்
உகார மொடுங்கு மகாரத்திலம்
மகார மொடுங்கு மோங்காரத் தென்றநல்
மார்க்கமீ தாகும்பா ஞானாயி.

177 ஓங்கார வித்தி னுதிக்கு மூனையாதிக்
கொக்குமூன் றக்கர மெனவறைந்தாய்
ஓங்காரந் தன்னை துரியமா யோதலே
னுண்மை யுகந்தருள் ஞானுயி.

178 அக்கர மூன்று மவத்தைகள் முற்றும
கன்று நிற்குமோங் காரமதைப்
பக்குவர் கண்டு துரியமா மென்பர்காண்
பாராதி யற்றதா லூனுயி.

179 இந்தநற் றுரிய மேனிலை யுற்றூர்க
ளில்லார்க ளுள்ளத்து மெங்குமொன்று
மந்தநற் பிரம மங்கங்கு வேருகு
மனுபவ மேதுரை ஞானுயி.

180 சேறுடன் பாசி தெளிந்தநீ ராடியிற்
திகழ்கதிர்ப் பிம்பச் செயலதுவாய்
வேறிடு மந்தக்க ரணத்தா லான்மா
விளங்குஞ் சர்வவியாபி யூனுயி.

181 விளங்கு வியாபக னென்றிடி லாத்மாவு
மேதினிக் கேன்தெரி யாததனை
யுளங் கொளும்படி யுண்மை யுரைத்தரு
ளுன்மணி யேமுத்து ஞானுயி.

182 கல்லினிற் பளிங்குக் கல்லதில் விண்ணுரு
காட்டும் வகையெனக் களங்கமதாய்ச்
சொல்லு மிராகாதி யற்றநற் புத்தியிற்
றேன்றுஞ் சர்வசாட்சி யூனுயி.

183 என்னுட லாதியா யெங்குமே வியாபித்
தென்றுேழி யாப்பர மாத்மாவிற்குச்
சொன்னதோர் சாட்சித்வ மெவ்வகை யாலுண்டு
சோதனை யாச்சொல்வாய் ஞானுயி.

184 மந்திரி கண்முத லானவர் செய்தொழின்
மன்ன னறிந்துஞ்செய் யாதவண்ணம்
புந்தி மனமாதி யாவுக்குஞ் சாட்சியாம்
போற்றுநிர் விகார மூனுயி.

185 தோன்று மிந்திய வியாபா ரனைப்போலச்
சொல்லுநிர் விகாரத்வ மெவ்வகையோ
ஈன்றிடு மன்னையா யென்ற னுளம்புக
வேறுழக் கியம்புவாய் ஞானாயி.

186 கார்வினைந் தோடவே கண்ட சிறுவர்தண்
கலைமதி தானோடக் காட்டுவதாய்
நேர்வினைந் தறியா நிர்மூடர் சொல்லுவர்
நிர்விகார மாத்மா வூனாயி.

187 இயம்புநல் லாத்மாவிற் கர்த்தானான் போக்த்தாவென்
றெப்போதுந் தோன்றிக்கொண் டேயிருக்க
நயம்பட வேய கர்த்தனென் ரூயதை
நானறி யச்சொலாய் ஞானாயி.

188 காணா மனோபாதி யாலேகர்த் துருத்வாதி
கற்பிக்கப் படினிங் கலைமதியாத்
தோன்றுஞ் சலத்தினி லன்றி யதற்குண்டோ
சொல்லான்மா வகர்த்தாதா ஞானாயி.

189 காமக் குரோதாதி துக்க சுகங்களுங்
கானாத்ம தர்மந்தா னென்றுசதா
வாய்மணி யஞ்செயுந் தார்க்கீகர்க் கேதென்பன்
வாயெடா வண்ணமே ஞானாயி.

190 காமக் குரோதாதி கர்மங்கள் புத்திக்காங்
காடச் சுழுத்தியிற் கண்டதெவர்
பாமர தார்க்கீகன் பட்சத்தைக் கண்டிக்கப்
பண்ணுமாத் மைக்கிய மூனாயி.

191 விளங்கு மிவ்வுடன் மூன்று நசிக்கவி
தேககை வல்லிய மேதெனவே
களங்க மாகுமனத் தோர்செயுஞ் சங்கைக்குக்
காரண மேதென்பேன் ஞானாயி.

192 வானனல் நீரிலே வானனல் நீரதும்
வந்து கலந்தொன்றாம் வாய்மையதாய்
ஞானிகள் மூவகைத் தேகோ பாதியற்றால்
நல்விதேக முத்தி யூனாயி.

193 அயன்முத லானோ ரகண்டானந்தரென்
றாகம மாதியறையுமன்பர்
நயமுற வேயஸ்வ மேதாதி செய்தகண்
டானந்தம் பெற்றாரோ ஞானவாயி.

194 சாகரத் தையடையு சரித்த நதிகள்
சாகர மாகுமோ சதுமுகனே
ராகமற் றனைவ ரற்ப நதியொக்கு
மானந்த மவ்வாறிங் கூறவாயி.

195 மோச மாகுமிந்தத் தேகேந் தியங்களின்
முடிவி லபிமான மூட்டுமெந்த
வாசைக்கு மாஸ்பத மாத்மா வாகிலிங்கு
வாட்சேப மாகாதோ ஞானவாயி.

196 வேலைக்கு மூலகோ ரெல்லார்க்கு நெய்யது
மிகவு மாசைக்காஸ் பதமதுபோற்
பாலிலே நெய்யது வாகும் பரமாத்மா
பாராசைக் காஸ்பத மூனவாயி.

197 எப்படி யறிந்து கொள்ளலா மென்றுந்தா
னெங்கு நிறைந்தொளிர் பிர்ம்மமதைச்
செப்பிடு வாயிந்தச் சங்கைக்கிங் குத்தரந்
தேன்மொழி யேமுத்து ஞானவாயி.

198 சொல்லக் குறுக்கு நெடுக்கோ டகலமுந்
தூல சூக்மகுண சாதியுரு
வில்லா ததுவது வாகும் பரப்பிர்ம்ம
மேந்திழை யேகாணு மூனவாயி.

199 இந்த வணுஞ்சொல்லி லெப்படி யறிவா
ரேழை மதியுள்ளா ரெங்குமொன்றா
மந்தப் பரப்பிர்மம் யாதினால் ஜொலிக்கு
மதனை யுரைத்தருள் ஞானவாயி.

200 தன்னொளி யாலெதா னெல்லாத்துட் சொலிக்கத்
தானென்றி னாலே சொலிப்பதுண்டோ
வன்னிக் கதிர்மதி யாவுஞ் சொலிப்பித்து
வாழ்பிர காசமா மூனவாயி.

201 [illegible]ச்சுட ராதியா யெவ்வுயி ருலக
[illegible]ற்று மொளிர்பிர காசனென்றாய்
அச்சமறவத னிச்சயந் தோன்றநீ
அளைந்திட வேண்டுவேன் ஞானாயி.

202 உலையி லிட்டயத் துண்டி னிலக்கினி
யுள்ளும் புறமுஞ் சொலிப்பதுபோ
னிலையி லாப்பிர பஞ்சஞ் சொலிக்கத்தா
னேருஞ்சொப் பிரகாச ஞானாயி.

203 எங்கு நிறைந்தொளி ராத்மாவுங் கண்ணுக்
கேன்றெரி யாதென்ப ரிவ்வுலகோர்
சங்கைக்குத் தரத்தைத் தந்தருள வேண்டுந்
தாயே தயாபரி ஞானாயி.

204 அந்தகன் கண்ணுக்கிங் காதித்தன் தோன்றான்கே
ளாத்மாவு மஞ்ஞானிக் கவ்வாறாகுஞ்
சிந்தைத் தெளிந்தமெய்ஞ் ஞானிகண் ணுக்கென்றுந்
திரையற்றுத் தோன்றிடு ஞானாயி.

205 புண்ணியத் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து தீராப்
பொல்லாத பாடங்கள் போக்கடிக்க
எண்ணியே யாத்திரை பண்ணுவ தாலதி
லின்பமுண் டோசொலாய் ஞானாயி.

206 ஆத்தும தீர்த்தத்தா லன்றிப் பிறப்பிறப்
பகன்று விடாதென் றறிவுடையார்
நேர்த்தியா யெஞ்ஞான்று நித்தியா நந்தமாம்
நிஜதீர்த்த மாடுவ ரானாயி.

207 இந்த நெறிபெற்றா ரியாவ ரவருற்ற
வின்ப சுகப்பேறு யாததனை
மந்த மதியினு ளந்தகாரம் நீங்க
மாவொளி செய்தருள் ஞானாயி.

208 சொல்லுஞ் சுகவாம தேவ ராதியாகச்
சுத்தமெய்ஞ் ஞானசு பாவராகி
யல்லும் பகலுமற் றானந்த மாயினே
னனுபவ மேதென்பே ஞானாயி,

209 எண்ணு மனத்தன்றி யில்லை யுலகாதி
யாவு மறிவன்றி யில்லைசதா
விண்ணென யாவுக்கு மாதர வாயெங்கும்
விளங்கு கின்றேனென் ஞானயி.

210 சித்த நிலைபெற்றுச் சின்மயத் தொன்றாகித்
தேச காலபரிச் சேதமற்று
நித்தியா நந்தமாய் நீநா னதுவற்று
நின்றிடு வாயென்று மூனயி.

211 நித்திரை யதனிற் கண்ட கனவாகி
நிகழுஞ் செகசீவ பரமெனுஞ்சொ
லத்தனையு மாகி யல்லா ததீதமா
மநுபவ மாகினேன் ஞானயி.

212 என்று நிருவிகற் பாங்கம தாகி
யிரப்பக லற்றரு ளியற்கைபெற்று
நின்றிடு லவத்தை யைந்திற்குஞ் சாட்சியா
நின்னிக ருண்டோசொ னூனயி.

213 என்னிக ரேதென்பே னின்னரு டன்னாலே
யென்னை யென்னுட்கண்டு மெங்குமாகி
உன்னுஞ் சுடரொளிச் சோதிக்குட் சோதிபெற்
றோங்குகி றேனென்றுஞ் ஞானயி.

214 இந்த வநுபவ மன்றிவே றில்லைகா
ணென்று மகலா ரடியர்களுஞ்
சந்ததம் புகல்வே தாகமாந் தங்களுஞ்
சாற்று முடிவீதே யூனயி.

215 சங்கை யறவுனக் கிந்தப் பெருஞ்செல்வந்
தந்த வருட்குரு சார்பெவையோ
யங்கையிற் கனியாக் காட்டிட வேண்டுமிங்
கானந்த ரூபியே ஞானயி.

216 சீராரு மெய்ஞ்ஞானச் சித்தி புரத்தொளிற்
சித்த னருட்பிர காசனெனும்
பேராரும் வள்ளற் பரம்பரை யிற்றந்த
பெற்றி யிதுவாகு மூனயி.